**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2022**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும்

மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், பதிவசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடனான தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறந்த பல்கலைக்கழகத்தின் 02 கட்டிடங்களுக்குரிய முத்தரப்பு மின் இணைப்பினை பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் மின்சார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,098,592 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் ஆண்டின் செலவின மொன்றாக காண்பிக்கப்பட்டமை காரணமாக கட்டிடத்தின் பெறுமதி மற்றும் ஆண்டின மிகை | மின்சார சபையினால் நிறுவப்பட்ட மின் வயர் முறைமையை பல்கலைக் கழகத்தின் சொத்து ஒன்றல்லாமல் இருந்ததுடன் அது மின்சார சபைக்கு சொந்தமான சொத்தாகும். அதனால் மின் வயர் தொகுதிக்காக செலுத்தப் பட்ட சேவை கட்டணங்களை மீண்டும் செலவினமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டதாக. | |
| (ஆ) | தவணையாக கிடைக்கும் பாடநெறி வருமானம் ஆண்டிற்குரியதாக இனங்காணும் அடிப்படை இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்தப் படாத காரணத்தினால் 2022 செப்தம்பர் முதல் 2022 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய 18 பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானத்தில் ரூபா 70,057,777 தொகை மீளாய்வாண்டு வருமானமாகவும் ரூபா 165,437,666 முன்னர் கிடைத்த வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவது முடியாமல் இருந்தது. | பல்கலைக்கழகத்தினால் பதிவு செய்யப்பட்ட மாணவர் களிடமிருந்து வருடாந்தம் மாணவர் கட்டணங்கள் அறவிடப்படு வதுடன் அது 02 தவணைகளில் மாணவர் களிடமிருந்து அறவிடப்படுகின்றது. கல்வியாண்டு மற்றும் கணக்காண்டிற்கு இடையே வேறுபாடு காணப்படுவதால் மீளாய்வாண்டின் கணக்கு ஆண்டுக்குரிய வருமானம் அவ்வாண்டின் மாணவர் வருமானமாக இனங் காணப்பட்டதுடன் எஞ்சிய வருமானம் முன்னர் கிடைத்த வருமானமாக கணக்கீடு செய்யப்படுவதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் உரித்தை இனங்கண்டு நிதிக் கூற்றுகளைச் சமர்ப்பிக்கும் போது 2021 திசெம்பர் 31 உள்ளவாறு காணப்பட்ட செலவிடப்பட்ட மூலதன மானியம் ரூபா 392,547,770 தொகை செலவிடப்படாத மூலதன மானியங்கள் ரூபா 24,789,318 ஆன மீதி மற்றும் நன்கொடை மற்றும் ஏனைய மானியங்கள் ரூபா 623,653,404 ஆன மீதிகளின் மொத்தம் ரூபா 1,040,990,492 ஆன மூலதன திரண்ட நிதியத்திற்கும் பொது ஒதுக்கத்திலிருந்து மூலதன ஒதுக்கீட்டு நிதியத்திற்கும் ரூபா 262,678,203 மற்றும் மீண்டெழும் திரண்ட நிதியத்திற்கு ரூபா 267,960,710 மாற்றும் போது நாட்குறிப்பு பதிவுகள் மற்றும் பேரேட்டு பதிவுகளுக்காக பதிவுகள் இடப்பட்டு இருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பிராந்திய மற்றும் 08 கல்வி நிலையங்கள் மற்றும் நாவல பிரதான நூலகம் என்வற்றில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கிரயம் பூச்சியமாக காணப்பட்ட ரூபா 208,381,961 மற்றும் தேறிய பெறுமதி ரூபா 44,264,590 ஆன நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 07 | பல்கலைக்கழகம் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை நூலக புத்தகங்களை பொருட் கணிப்பீட்டினை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதுடன் அதன் பிரகாரம் கணக்குகளுக்குரிய சீராக்கங்கள் | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 42 மற்றும் 43 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இன் 42 மற்றும் 43 ஆம் பந்திகளுக்கு இணங்காத வகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 325,093,568 மற்றும் பெறுமதிக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மீள் மதிப்பீட்டு மிகையாக ரூபா 280,829,078 மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்படுவதாக | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை திறந்த பல்கலைக் கழகத்திற்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு கால பகுதியில் உயர்கல்வி நுழைவினை அதிகரிக்கும் செயற்திட்டத்திலிருந்து (AHEAD) கட்டிடங்களை மேம்படுத்துவதற்காகவும் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காகவும் கிடைத்திருந்த மொத்தம் ரூபா 18,119,516 தொகையும் மீண்டெழும் செலவினத்திற்காக கிடைத்திருந்த மொத்தம் ரூபா 137,265,314 தொகையும் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன. | கடந்த பல ஆண்டுகளாக பூராவும் மூலதன மானியங்களுக்காக கணக்கீடு செய்யப்பட்ட முறையில் இந்த ஆண்டிலும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | செயற்திட்டத்திலிருந்து கிடைத்த சொத்துக்கள் மற்றும் உரிய செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய மாணவர் வருமானம் சரியாக இனங்காணப்படாமல் மாணவர் வருமானக் கட்டுப்பாட்டு கணக்கு மீதி மற்றும் இனங்காணப்படாத மாணவர் வருமான கணக்கின் மீதிகளுக்கு இடையே ரூபா 760,779,170 ஆன வேறுபாடு பெறவேண்டிய மாணவர் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | OMIS கணனி முறைமையில் காணப்படும் சிக்கல்கள் காரணமாக மாணவர் வருமானத்திற்குரிய சரியான காலப்பகுப்பாய்வு ஒன்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. புதிய கணனி முறைமை மூலம் குறைபாடுகளை சீராக்குவதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்த்து இருப்பதாக. | மாணவர் வருமானம் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 22,972,539 ஆன மேலதிக பெறுமான தேய்வு கணக்கீடு செய்ததை கணக்கீடு திருத்திய நிதிக்கூற்றுக்களில் சரியாக்கும் போது தவறுதலாக நாட்குறிப்பு பதிவு இட்ட காரணத்தினால் பெறுமானத்தேர்வு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டு பேரேட்டு கணக்குகளில் மீதி ரூபா 45,914,112 தொகை கூடுதலாக காண்பிக்கப் பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வுக் கணக்கீடு செய்தல் மதிப்பீடுகளில் தவறு ஒன்று இடம்பெற்றுள்ளதை ஏற்றுக் கொள்வதாக | பெறுமானத் தேய்வு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள், பற்றுச்சீட்டுக்கள், பேரேட்டு உறுதிச்சீட்டுக்கள் போன்ற மூல ஆவணங்களை தயாரிக்காது பெறுமானத் தேய்வு, பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மற்றும் சொத்துக்கள் கணக்குகளுக்கு கணனி கட்டமைப்பின் மூலம் பதிவு செய்தல் இடம்பெற்றிருந்தது. இவ்வாறான பதிவுகளினுள் தவறான பதிவுகளை திருத்துவதற்காக ஆண்டின் இறுதியில் பேரேட்டு பதிவுகளை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்க கணக்குகளிலிருந்து ரூபா 277,275,406 ஆன தொகை அகற்றப்பட்டிருந்தது. | OMIS முறைமையில் பல வருடங்களாக சொத்துக்கள் பதிவேடு சரியாக நாளது வரையாக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்ட துடன் அம்முறைமையில் காணப்படும் வரையரைகள் காரணமாக அதனை பின்னர் சீராக்க முடியாமல் இருந்தது. ஆதலால் கணினி மூலம் பெறுமானத் தேய்வு சரியாக இடம்பெறவில்லை. அதன் பிரகாரம் கணினி முறைமை மூலம் வழங்கப்படும் பெறுமானத்தேய்வு கணிப்பீடு நாட்குறிப்பு மூலம் நீக்கப்பட்டு சரியாக கணக்கிடப்பட்ட வருடாந்த பெறுமானத்தேய்வு பெறுமதி நாட்குறிப்பு பதிவு மூலம் கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டது. | கணனி கணக்கீட்டு முறைமையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5,408,784 கிரயத்திலான கற்பனைச் சொத்துக்கள் அவை கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டு வரை காலக்கழிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | ரூபா 5,340,344 ஆன E-books மற்றும் மென் பொருட்கள்) Software) இன் ஆயுட் காலத்தை எதிர்வு கூற முடியாததால் அச்சொத்துக்கள் நிச்சயமற்ற ஆயுட்காலம் உள்ள கற்பனைச் சொத்துக்களாக வெளிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கற்பனைச் சொத்துக்களின் ஆயுட் காலத்தை இனங் கண்டு காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அரச அச்சீட்டு திணைக்களத்திற்கும் ஆங்கில மொழி தொடர்பான பட்டபின் படிப்பு நிறுவனத்திற்கும் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,021,113 என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அந் நிறுவனங்களின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் அம்மீதிகள் ரூபா 4,013,523 ஆக இருந்ததால் ரூபா 1,992,410 ஆன வேறுபாடு காணப்பட்டது. | அரச அச்சீட்டு திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட அச்சுக் கட்டளைகளின் அடிப்படையில் செலுத்த வேண்டிய மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டன. அவ்வாறே 05 Zoom Business Accounts இற்காக செலவிடப்பட்ட 2022 ஆம் கணக்காண்டில் குறித்த பகுதியான ரூபா 33,002 ஆன செலவினம் ஆங்கில மொழி தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளி நிறுவனங்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மீதிகளை உறுதிப் படுத்துதல் மற்றும் உள்ள ஆவணங்களை ஒப்பீடு செய்து சரியான பெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக் கழகத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 25 பிராந்திய நிலையங்கள் மற்றும் வரைவு உபகரணங்கள் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ரூபா 47,666,626 கிரயத்திலான பாடநெறி பொருட்கள் இருப்பு பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்படாமை காரணமாக அந்த இருப்புக்களின் உள்ளவாறான தன்மை மற்றும் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்கு முடியாதிருந்தது. | பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்களில் பாடநெறி பொருட்கள் பிரதேச நிலையங்களில் உதவி பணிப்பாளர்களுடன் கூடிய குழு மூலம் பௌதீக ரீதியாக பரீட்சக்கப்பட்டு இருப்பு கணிப்பீடு மேற் கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதாக | பல்கலைக்கழகத்தின் அனைத்து பிரிவுகள் மற்றும் நிலையங்களில் இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டு மீதிகளை நிதிக் கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 30,282,945 ஆன அட்டுறுச் செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினங்களிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் கூடுதலாக நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தன. | 2021 ஆம் ஆண்டிற்குரிய அட்டுறுச் செலவினங் களுக்காக கொடுப்பனவு செய்யும் போது அச் செலவினத்தை அட்டுறுச் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக குறித்த செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதை சீராக்கு வதற்கு 2022 ஆம் ஆண்டின் உரிய செலவினக் கணக்கிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. | அட்டுறு செலவினங் களுக்காக கொடுப்பனவு செய்யும் போது குறித்த அட்டுறு செலவினக் கணக்கிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 102,103,104 மற்றும் 2016 பெப்ரவரி 12 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா 31,072,291 ஆன சேதங்கள் மற்றும் காலாவதியான பாடநெறிப் பொருட்கள் (Course Materials) திறைசேரியின் அங்கீகாரமின்றி | கல்வியாண்டுகளுக்கு இடையே மாணவர்களால் பாடநெறிகளை விட்டுச் செல்லல், விடயப் பரப்பு மாறுதல் போன்ற விடயங்கள் காரணமாக சில அச்சிடப்பட்ட புத்தகங்களை அகற்று வதற்கு நேர்கின்றது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பல்கலைக்கழக ஆளுகை சபையால் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | இது நிகழ்நிலை கல்வியை வழங்கும் நிலையமொன்றில் இடம் பெறக்கூடிய பொதுவான நிலைமையொன்றாகும். அதன் பிரகாரம் ஆளுகை சபை அங்கீகாரத்தின் கீழ் பாடநெறிப் பொருட்களை அந்த ஆண்டின் செலவினமாக கணக்கீடு செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| ii | நிதிப்பிரமாணம் 113(3)(ஆ) | நிறுவகத்தின் கொள்கையின் பிரகாரம் பதிவினை புதுப்பிக்காத 05 ஆண்டுகளைக் கடந்த மாணவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 10,516,756 தொகை திறைசேரி அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை அவ்வாறு பதிவழிக்கப்பட்டிருந்த மாணவர் வருமானம் ரூபா 392,551,000 ஆக இருந்தது. | பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பாடநெறிக்காக பதிவொன்றைப் பெற்ற அனைத்து மாணவர்களின் தரவுகள் பல்கலைக்கழகத்தின் கணனி மூலம் பேணிச் செல்லப்படுகின்றன. எவரேனும் மாணவர் பாடநெறிகளிலிருந்து விலகுதல், விட்டுச் செல்லல்/பூர்த்தி செய்தல் போன்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அக்கணனி முறையிலிருந்து அகற்றுதல் இடம் பெறுவதில்லையென்தாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ) பிரிவு | உரிய அமைச்சரினரும் நிதி அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் பல்கலைக் கழகத்தினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,516,407,982 தொகை நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரி அங்கீகாரம் கிடைக்கும் வரை குறுங்கால முதலீட்டை தாமதமாக்க முடியாததால் திறைசேரி உத்தியோகத்தர்களின் ஆலோசனை பேரில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலேயே திறைசேரியின் அங்கீகாரத்திற்கான வேண்டுகோள் கடிதங்கள் அங்கீகாரத்திற்காக திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26(i) ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய | (i) கல்விச் செயற்பாடு களுக்காக சபடிகல் வருடாந்த விடுமுறை வெளிநாடு செல்லும் | அனைத்து அரசு நிறுவனங்களையும் தொடர்புபடுத்தி தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 2023 சனவரி 18 ஆந் திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் கடிதம் | | பல்கலைக்கழக பதவியணி அங்கத்தவர்களுக்காக விமான டிக்கட் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கு உள்நாட்டு நிதியத்தை பயன்படுத்த முடியாத போதும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி முதல் 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை சபடிகல் விடுமுறை அடிப்படையில் வெளிநாடு சென்ற 04 விரிவுரையாளர்கள் மற்றும் துணைவருக்காக உள்நாட்டு நிதியங்களிலிருந்து ரூபா 435,500 தொகையும் பிணைமுறி மற்றும் உடன்படிக்கை மீறியவற்றிருந்து கிடைத்த பணத்திலிருந்து ரூபா 1,446,300 தொகையும் விமான டிக்கட் சீட்டு மற்றும் சூடான ஆடை படிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | 2022/03 ஆம் இலக்க 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக் கழகத்தினால் அனைத்து அங்கீகாரங்கள் இடை நிறுத்தப்பட்டன. அதன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் UGC-DA-F/Bond violation மற்றும் 2022 நவம்பர் மாத 09 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இடை நிறுத்தப் பட்ட விடயங்களுக்கு இடம் அளிக்கப்படுவதாக | |
| | (ii) | பிணைமுறி மற்றும் உடன்படிக்கை மீறுதல் காரணமாக அறவிடப் பட்ட பணத்தை வேறு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் கிடைத்த உடன் அரச வருமானத்துக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு கிடைத்திருந்த ரூபா 19,007,654 தொகை பல்கலைக்கழக வருமானமாகவும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் கிடைத்த ரூபா 133,497,387 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 737 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை எடுத்ததாக | திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6 ஆம் பிரிவு | 1989 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்குதியில் பிணை முறி மீறிய 31 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 58,298,333 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடுவதற்கு பல்கலைக்கழகம் தவறி இருந்தது. | 06 உத்தியோகத்தர் களுக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன், அவ்வாறே முகவரிகளை கண்டு பிடிக்க முடியாத 12 உத்தியோகத்தர்கள் தவணையாக அறவிடப்படும் 7 உத்தியோகத்தர்கள் பிணைமுறை மீறி பத்து வருடங்களை மிகைத்துள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2021 ஒக்டோபர் 07 ஆம் திகதி நடைபெற்ற விடுமுறை குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அடுத்து வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | உத்தியோகத்தர் களின் பிணைமுறி மீறல் காரணமாக அரசாங்கத்துக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கும் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,415,469,928 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 12,744,012 ஆன கற்பனைச் சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக் களுக்கு வருடாந்தம் சேர்க்கப்படுகின்ற அளவு மற்றும் அவற்றின் பெறுமதி தொடர்பான விவரங்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்புகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.11 ஆம் பிரிவு | பெறுமதி சேர் வரி அடிப்படையான வரி பட்டியல் கிடைத்த பின்னர் வழங்குனருக்கு செலுத்த வேண்டிய போதும் பட்டியல்களைப் பெற்றுக் கொள்ளாமல் 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை மொத்தம் ரூபா 10,088,143 ஆன வெட் வரி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ரூபா 10,088,143 ஆன நிறுத்தி வைக்கப் பட்டிருந்த வெட் வரி தொகைக்குரிய வழங்குனர்களால் வரி விடுவிப்பு சான்றிதழ் எமக்கு இதுவரை சமர்ப்பிக்கவில்லை ஆதலால் அத்தொகைக்குரிய சான்றிதழை சமர்ப்பிக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | பாடநெறி வழிகாட்டல் செயற்பாட்டு கால அட்டவணை (activity schedule) தொடர்பாக | 2023 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் காலத்தில் சரியான நிர்வாகப் பிரிவிற்காக செயல் | பல்கலைக்கழகத்தின் திரட்டிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிறுவனத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | Operational Manual இன் 2.3 ஆம் பிரிவு | மற்றும் பல்கலைக்கழகத்தின் அனைத்து பிரிவுகளின் செயல்பாடுகளை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் செயலாற்றல் மட்டத்தை பரீட்சிப்பதற்கு 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் செயல் நடவடிக்கைத் திட்டங்களின் செயன் முன்னேற்றம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை திட்டத்தை நாளதுவரையாக்கி பல்கலைக்கழக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | அனைத்து பிரிவுகளின் செயற்பாடுகளுடன் கூடியதாக தயாரிக்கப்பட்ட செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு திறந்த பல்கலைக்கழகத்தின் செயலாற்றலை அடைந்து கொள்ளப்பட வேண்டும் |
| (ஏ) | 1995 ஜூலை 14 ஆம் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | கணக்காய்விற்கு சமர்ப் பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 18 பரீட்சைகள் நடத்தப்பட்டு 3 மாதங்கள் கடந்த பின்னர் பெறுபேறுகளை வழங்கு வதற்காக குறைந்தது 54 முதல் கூடியது 299 நாட்கள் வரையான காலம் கடந்திருந்ததுடன் 88 குழுக்களின் பரீட்சை நடத்துவது தொடர்பான தரவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 617,359,771 ஆன மிகையாக இருந்ததுடன், அதனோடத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 33,622,146 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 583,737,625 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் அவ்வதிகரிப்பிற்கு அரசின் மூலதன வருமானம் மற்றும் மீண்டெழும் மானியம், வெளிவாரி பாடநெறி கட்டண வருமானம் மற்றும் விண்ணப்ப விற்பனை வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகித பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மூலதன மானியங்களை சீராக்குவதற்கு முன்னர் மிகை ரூபா 542,960,584 ஆக இருந்த போதும் மொத்த வருமானம் ரூபா 4,516,515,077 ஆக இருந்தமையால் இலாப விகிதம் 12 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டின் இலாப விகிதம் 2 சதவீதமாக இருந்தது. மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் 2:1 மற்றும் 1:1 ஆக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் காணிச் சட்டத்தின் 6(1) பிரிவின் பிரகாரம் பெயரளவுக் கட்டணம் ஒன்று அறவிடப்பட்டு விசேட பத்திரமன்றின் மூலம் 8.2965 ஹெக்டேயர் அளவிலான 17 காணிகளின் உரித்து பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டமைக்காக 2021 ஜூலை 19 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் கணக்காய்வு திகதியான 2023 மே 8 ஆம் திகதி வரையிலும் அக்காணியை கையேற்பதற்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. திறந்து பல்கலைக்கழகத்தினால் உடைமை கொண்டுள்ள 2.4506 அளவிலான 5 காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 11 காணித் துண்டுகளை கையேற்பதற்கு தேவையான பரிந்துரைகளுக்குரிய பிரதேச செயலாளர்களின் பரிந்துரை அறிக்கைகளுடன் மாகாண காணி ஆணையாளர் மூலம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதுடன் பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. | உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும் |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையின் அங்கீகாரத்தின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் கல்விசார் பதவியணியின் 41 பேருக்கும் கல்விசாரா பதவிகளில் 252 பேருக்கும் மீளாய்வாண்டில் ரூபா 100,314,372 படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த துடன் தற்காலிக அடிப்படையில் கல்விசார் பதவியில் 21 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | இப்பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களிலும் கல்வித் துறைகள் மற்றும் ஏனைய நிர்வாக பிரிவுகளின் நிர்வாக நடவடிக்கைகளை வழமையான வகையில் நடத்திச் செல்வதற்காக பதவி களுக்காக ஆளுகை சபையின் அங்கீகாரத்துடன் பல்கலைக் கழகத்தினால் உழைக்கும் நிதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப் பட்டிருந்தனர். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் வெற்றிடங்களில் ஒதுக்கப்பட்ட பணத்தை பயன்படுத்தி (against permanent Cadre Vacancies) கல்வித் துறைகளில் கல்வி நடவடிக்கைகளை முதன்மையாக பேணிச் செல்வதற்காக தற்காலிகமாக விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக | தேவையான கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணிக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைதிறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 58 மில்லியன் கிரயமான பல்கலைக்கழகத்தின் 05 பிரிவுகளின் நடவடிக்கைகள் தொடர்பாக மொடியுலாக நிறுவப்பட்டிருந்த முகாமைத்துவ தகவல் முறைமையில் (omis) காணப்படுகின்ற குறைபாடு களை தீர்வு செய்வதற்கு பராமரிப்பு கம்பெனிகளுக்கு முடியாமல் இருந்ததால் 2018 ஆம் ஆண்டு முதல் புதிய உள்ளக முறைமையொன்று (new omis) நிறுவுவதற்காக ரூபா 45,757,992 செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் புதிய முகாமைத்துவ தகவல் முறைமையை நிறுவுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | 2018 ஆம் ஆண்டிலிருந்து புதிய கணினி முறைமை யொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை கணினி முறைமையை வடிவமைப்ப தற்காக தேவையான தகவல் சேகரிக்கும் செயற்பாடு மாத்திரம் இடம் பெற்றுள்ளதுடன் கணினி முறைமை ஒன்றாக கணக்கீடு செய்வதற்கு கணனி முறையொன்று நிர்மாணிக்கப்படவில்லை. | பல்கலைக்கழகத்திற்கு முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை நிறுவி சரியாக மற்றும் செயற்திறனாக பேணிச் செல்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திறந்த பல்கலைக்கழகத்தின் 06 பீடங்களில் 226 கல்வி பாடநெறிகள் (Study Programmes) 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் 90 கல்விப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 06 பீடங்கள் மூலம் செயற்படுத்தப்படு கின்ற 136 பாடநெறிகளில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தல், பூர்த்தி செய்தல், பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் தாமதம் இக்காலப் பகுதியில் சராசரியாக (average) 11 மாதங்களாக காணப்பட்டன. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | திரட்டிய செயற்பாட்டு கால அட்டவணை (Activity Schedule) இன் பிரகாரம் செயன் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 05 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் 62 பிரதான பாடநெறிகளின் விண்ணப்பங்கள் கோருதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் பதிவுகளை பூர்த்தி செய்யும் காலம் வரை குறைந்தது 02 மாதங்கள் முதல் கூடியது 20 மாதங்களுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த 100 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்த 100 சந்தர்ப்பங்களில் 30 சந்தர்ப்பங்கள் மாத்திரம் Covid 19 நாட்டில் பரவிய காலத்திற்குரியதாக இருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | பாடநெறிகளுக்காக விண்ணப்பங்களை கோரியதன் பின்னர் தாமதமின்றி பதிவுகளை மேற்கொண்டு பாடநெறிகளை ஆரம்பிபதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறந்த பல்கலைக்கழகத்தினால் திறைசேரி அங்கீகாரம் இன்றி செயல்படுத்தப்படுகின்ற ஊழியர் காப்புறுதி கடன் முன்மொழிவு முறைமைக்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அரசின் நிதி ரூபா 42,192,534 தொகை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அரசின் நிதி ரூபா 30,000,000 மற்றும் ஊழியர் பங்களிப்பு ரூபா 27,789,813 தொகை பல்கலைக்கழகத்தில் தாபிக்கப்பட்ட செலுத்த வேண்டிய காப்புறுதி கணக்கின் ஊடாக உள்ளக ரீதியாக நியமிக்கப்பட்ட குழுவொன்றின் பரிந்துரை அடிப்படையில் ஊழியர் காப்புறுதி விண்ணப்பங்களுக்காக ரூபா 57,037,256 தொகையான முழுத் தொகையையும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மருத்துவ காப்புறுதி முறைமை ஆளுகை சபை அங்கீகாரத்தின் பேரில் 2013 ஆம் ஆண்டு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஊடாக பராமரித்து செல்லப்பட்டது. எனினும் அதில் சில சில குறைபாடுகள் காணப்பட்டமையால் உபவேந்தரினால் காப்புறுதி முன்மொழிவு முறைமை தொடர்பாக ஆய்வொன்றினை மேற்கொண்டு ஏனைய பல்கலைக்கழகங்களில் காணப்படும் இவ்வாறான சுயமான மருத்துவ நலன்புரி முன்மொழிவு முறைமை தொடர்பான ஆய்வு ஒன்றை செய்து தயாரிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆளுகை சபை அங்கீகாரத்துடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து திறந்த பல்கலைக்கழத்திற்குக மருத்துவ நலன்புரி முன்மொழிவு முறைமை ஆரம்பிக்கப்பட்டதாக | காப்புறுதி முன்மொழிவு முறைமைக்காக முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

.

### 3.4. செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரத்தினபுரி பிராந்திய நிலையத்தின் கூரை மற்றும் கார்பன் வெப்ப காப்பகம் (thermodynamic lab) என்பவற்றை நவீனமயப்படுத்தலுக்காக நேர் உழைப்பு அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு 2022 ஆகஸ்ட் செப்டம்பர், நவம்பர் மாதங்களில் ரூபா 11,272,916 ஆன மூலப்பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் இந்த நவீனமயப்படுத்தல் 2023 மே 15 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை | பிராந்திய நிலையத்தின் கூரையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் இலங்கை தரைப்படையின் நேர் உழைப்பு பங்களிப்பின் மூலம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக தேவையான மூலப் பொருட்கள் 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட போதும் இந்நடவடிக்கைகள் 2023 ஜூன் முதல் வாரத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | செயற்திட்டங்கள் மற்றும் மூலதன வேலை திட்ட தாமதங்கள் இல்லாமல் ஆரம்பித்து நிதியக் குறைபாட்டினை தவிர்த்து நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |